செய்திவெளியீடு **நாள் : 11.11.2025**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் வருகின்ற 14.11.2025 அன்று திறக்கப்படவுள்ள கொளத்தூர், பெரியார் நகர் முதல்வர் படைப்பகத்தின் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு .

****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் 14.11.2025, வெள்ளிக்கிழமை அன்று திறக்கப்படவுள்ள கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில், புதுப்பிக்கப்பட்ட பெரியார் நகர் நூலகம் மற்றும் முதல்வர் படைப்பகத்தை இன்று (11.11.2025) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு, முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் கொளத்தூர் ஏரிக்கரை பூங்கா மற்றும் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் அலுவலகம் மற்றும் பெரவள்ளூர் காவல் நிலையத்தின் முன்னேற்றப் பணிகள் குறித்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநரும் கொளத்தூர் மண்டல கண்காணிப்பு அலுவலருமான திரு.பா.கணேசன் இ.ஆ.ப., மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., கொளத்தூர் காவல் துணை ஆணையாளர் திரு.பொ. குமார், அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் (சென்னை) முதல்வர் டாக்டர் டி.எஸ்.சரவணன், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மு.இந்துமதி, தலைமை பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, இணை இயக்குநர் (பொது நூலகம்) திரு.இளங்கோ சந்திரகுமார், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ராஜன்பாபு, நீர்வள ஆதாரத்துறை செயற்பொறியாளர் திரு.ராதாகிருஷ்ணன், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மின்சாரத்துறை, மாநகராட்சி மற்றும் சிஎம்டிஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate™